www.Padasalai.Net

# GURU COACHING CENTRE

# T.N.PALAYAM

# GOBI-ERODE-638 506.

GURU ACADEMY

# TNPSC / TRB / TET
# PAPER I & II
# TAMIL

G.RAMKUMAR M.A.M.A.B.Ed.D.T.Ed.PGDCA.,

CELL : 99444 77587,9942263961.

Email:raam961@gmail.com

www.Padasalai.Net


# GURU COACHING CENTRE

## T.N.PALAYAM,GOBI,ERODE-638 506.

## G.RAMKUMAR M.A.M.A.B.Ed.D.T.Ed.PGDCA.,

## CELL : 99444 77587,99422 63961.


# திருவருட்பா

6ம் வகுப்பு முதல் 10 வகுப்பு வரை உள்ள தமிழ் பாடத்திற்கான வினா – விடைகள்

1. திருவருட்பாவை எழுதியவர் - **இராமலிங்க அடிகளார்**

2. சிறப்பு பெயர் - **திருவருட்பிரகாச வள்ளலார்**

3. பிறப்பிடம் - **கடலூர் மாவட்டம் மருதூர்**

4. பெற்றோர் - **இராமையா - சின்னமையார்**

5. வாழ்ந்த காலம்: **05.10.1823 முதல் 30.01.1874**

6. எழுதிய நூல்கள்: **ஜீவகாருண்ய ஒழுக்கம், மனுமுறைகண்ட வாசகம்.**

* பசித்துயர் போக்கி மக்களுக்கு உணவளிக்க இராமலிங்க அடிகளார் அமைத்தது - **அறச்சாலை**

* அறிவு நெறி விளங்க வள்ளலார் நிறுவியது - **ஞானசபை**

* சமர சன்மார்க்க நெறிகளை வழங்கியவர் - **இராமலிங்க அடிகளார்.**

* இராமலிங்க அடிகளார் பாடிய பாடலின் தொகுப்பிற்கு பெயர் - **திருவருட்பா.**

* வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடிய மனம் கொண்டவர் - **இராமலிங்க அடிகளார்**

* வள்ளலார் பாட்டை "**மருட்பா**" என்று கூறியவர் - **ஆறுமுக நாவலர்.**

* கடவுளை "கண்ணில் கலந்தான் கருத்தில் கலந்தான்", என்றும் "உயிரில் கலந்தான் கருணை கலந்து" என்றும் பாடியவர் - **இராமலிங்க அடிகளார்**



GURU ACADEMY

# திருக்குறள்

* இயற்றியவர் - திருவள்ளுவர். இவர் **நாலாயிரம் ஆண்டுகளுக்கு** முன்பு பிறந்தவர் என்று கூறப்படுகிறது.
* திருவள்ளுவரின் காலம் - **கி.மு.31.** இந்த ஆண்டு பற்றி தெளிவான சான்றும் கிடைக்கவில்லை. பெற்றோர் பற்றிய தெளிவான சான்றும் கிடைக்கவில்லை.
* திருவள்ளுவரின் சிறப்பு பெயர்கள் - **தெய்வப்புலவர், செந்நாபோதார், நாயனார், முதற்பாவலர், பொய்யில்புலவர், நான்முகனார், பெருநாவலர், மாதானுபங்கி, தேவர்.**

* திருக்குறள் - **உலகப் பொதுமறை** எனவும் **முப்பால்** எனவும் **வாயுறைவாழ்த்து** எனவும் அழைக்கப்படுகிறது.

* திருக்குறள் - **அறம்** + **பொருள்** + **இன்பம்** என **மூன்று** வகையாக பிரிக்கப்பட்டுள்ளது. **இயல்களின் எண்ணிக்கை 9.**

* திருக்குறளின் 3 பிரிவுகள்: **அறத்துப்பால்** 38 அதிகாரங்களும், **பொருட்பால்** 70 அதிகாரங்களும், **காமத்துப்பால்** 25 அதிகாரங்களும்.

* திருக்குறள் **பதினென் கீழ்க்கணக்கு நூல்களுள்** ஒன்று.

* திருக்குறள் 133 **அதிகாரங்களும்**, அதிகாரத்திற்கு **10 பாடல்கள்** என மொத்தம் 1330 **குறட்பாக்கள்** கொண்டது.

* திருகுறளுக்கு **10 பேர்** உரையெழுதியுள்ளனர். அவற்றில் சிறந்த உரை **பரிமேலழகர்** எழுதிய உரை.

குறிப்பு: திருவள்ளுவர் ஆண்டு: **கிறிஸ்துவ ஆண்டு** +31 அதாவது 2012 என்பது திருவள்ளுவர் ஆண்டில் (2012+31) 2043 என்று கூறுவோம்.

* திருக்குறளின் சிறப்பு பெயர்: **முப்பால், பொதுமறை, பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, உத்திரவேதம், தெய்வநூல், திருவள்ளுவம், பொருளுரை, முதுமொழி, திருவள்ளுவபயன்.**

* **முயற்சி திருவினை ஆக்கும்** என்று கூறியவர் - **திருவள்ளுவர்.**

**பொருள்:** வையகம் - உலகம், நண்பு - நட்பு, மறம் - வீரம், புன்கணீர் - துன்பம் கண்டு பெருகும் கண்ணீர், வற்றல்மரம் - வாடியமரம், என்பு - எலும்பு, ஆர்வலர் - அன்புடையர், வழக்கு - வாழ்க்கைநெறி.

# தமிழ்த்தாத்தா உ.வே.சா

* உ.வே.சா - உத்தமதானபுரம் வேங்கட சுப்பையர் மகன் சாமிநாதன்.
* உ.வே.சாவின் இயற்பெயர்- வேங்கடரத்தினம், அவரது ஆசிரியர் அவருக்கு சூட்டிய பெயர் - **சாமிநாதன்.**

* உ.வே.சா பிறந்த ஊர் - **திருவாரூர் மாவட்டத்தில் உள்ள உத்தமதானபுரம்.**
* உ.வே.சாவின் காலம் - **19.02.1855 முதல் 24.04.1942 வரை**
* உ.வே.சாவின் ஆசிரியர் - **மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை.**

GURU ACADEMY

* உ.வே.சாவின் பெயரால் **சென்னை பெசன்ட்** நகரில் 1942ல் நிறுவப்பட்ட **நூல் நிலையம்** இன்றும் செயல்பட்டு வருகிறது.
* உ.வே.சா ஓலைச்சுவடிகளை பதிப்பித்ததால் பதிப்புத்துறையின் **வேந்தர்** என அழைக்கப்படுகிறார்.
* உ.வே.சாவுக்கு திருவாரூர் மாவட்டம் **உத்தமதானபுரத்தில் நினைவு இல்லம்** உள்ளது.
* உ.வே.சாவுக்கு **தட்சணாமூர்த்தி கலாநிதி** என்று பெயர் வழங்கியவர் - **சங்கராச்சாரியார்.**
* உ.வே.சாவின் வாழ்க்கை வரலாற்று நூல் "**என் சரிதம்**" **(ஆனந்த விகடனில் தொடராக வெளிவந்தது)**
* உ.வே.சா ஈரோடு மாவட்டத்தில் உள்ள **கொடுமுடி** ஆற்றில் விடப்பட்ட **ஓலைச்சுவடியை** எடுத்து படித்து புதுப்பித்தார்.
* குறிஞ்சிப் பாட்டின் ஆசிரியர் - **கபிலர்.**
* குறிஞ்சிப் பாட்டு எந்த நூல்களுள் ஒன்று - **பத்துப்பாட்டு**
* கபிலரின் குறிஞ்சிப்பாட்டில் 99 **வகையான பூக்களின் பெயர்கள்** இடம்பெற்றுள்ளன.
* உ.வே.சாவின் தமிழ் பணிகளை பாராட்டிய வெளிநாட்டு அறிஞர்கள்: **ஜி.யு.போப், சூலியல் வின்சோன்.**
* 2006-**ஆம்** ஆண்டு உ.வே.சா. வைப் பெருமைப்படுத்தி **அஞ்சல் தலை** வெளியிட்டது **மத்தியஅரசு.**

**உ.வே.சா பதிப்பித்தநூல்கள்**:

| | |
|---|---|
| **எட்டுத்தொகை** - 8 | **பத்துப்பாட்டு** -10 |
| **சீவகசிந்தாமணி** - 1 | **மணிமேகலை** - 1 |
| **சிலப்பதிகாரம்** - 1 | **புராணங்கள்** - 12 |
| **உலா**- 9 | **கோவை** - 6 |
| **தூது** - 6 | **வெண்பாநூல்கள்** -13 |
| **அந்தாதி** - 3 | **பரணி** - 2 |
| **மும்மணிக்கோவை** -2 | **இரட்டைமணிமாலை**-2 |
| **பிறபிரபந்தஸ்கள்** - 4 | |

* **ஓரிகாமி** என்பது காகிதத்தில் உருவங்கள் செய்யும் **கலை.**
* ஜப்பானியர் வணங்கும் பறவை - **கொக்கு.**
* ஜப்பானில் அணுக்கதிர் வீச்சால் பாதிக்கப்பட்டு இறந்த பெண் - ஜப்பான் நாட்டைச் சேர்ந்த **சடகோ சசாகி.**
* சடகோ சசாகிக்கு நம்பிக்கை தந்தவர் - **தோழி சிசுகோ**
* அக்குழந்தையின் நினைவிடம் உள்ள இடம்: **ஹிரோசிமா நகரம்.**
* அரவிந்த குப்தா எழுதிய நூலின் பெயர் - **டென் லிட்டில் பிங்கர்ஸ்**
* அவள் இறக்கும் முன் 644 **காகித கொக்குகள்** செய்தார்.
* **டென் லிட்டில் பிங்கர்ஸ்**(Ten Little Fingers) என்ற நூலை எழுதியவர்: **அரவிந்த் குப்தா.**
* உ.வே.சா. ஆற்றில் விட்ட ஓலைச்சுவடியை தேடி எடுத்த இடம் - **கொடுமுடி(ஈரோடு மாவட்டம்)**
* "பனை ஓலையை பக்குவப்படுத்தி அதில் எழுத்தாணி கொண்டு எழுதுவர்"-அவ்வாறு எழுதப்பட்ட ஓலைக்கு பெயர் **ஓலைச்சுவடி.**
* ஓலைச்சுவடி எழுத்துக்களில் எது இருக்காது -**புள்ளி, ஒற்றைக்கொம்பு, இரட்டைக்கொம்பு வேறுபாடு இருக்காது.**

# இலக்கணம்

* நாம் பேசும் மொழியை, எழுதும் மொழியைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு தேவைப்படுவது - **இலக்கணம்**.
* தமிழின் முதல் எழுத்து - **அ**
* "**அ**" என்ற எழுத்தின் I என்ற கோடு குறிப்பது - பழங்கால மனிதன் முதுக்கு பின்னால் வைத்திருந்த **அம்புக்கூட்டை** குறிக்கிறது.
* நட்பு எழுத்துக்களை மரப்பிலக்கணம் எவ்வாறு கூறுகிறது – **இன எழுத்துக்கள்**
* என்பு என்பதன் பொருள் - **எலும்பு**
* "**ங்**" என்ற எழுத்துக்கு பின்னால் வரும் இன எழுத்து - **க**
* "**ஞ்**" என்ற எழுத்துக்கு பின்னால் வரும் இன எழுத்து - **ச**

ங்க - சிங்கம், ஞ்ச - மஞ்சள், ண்ட -பண்டம், ந்த - பந்தல், ம்ப - கம்பன், ன்ற - தென்றல்.

# பாம்புகள்

* விவசாயிகளின் நண்பன் - **பாம்பு.**
* உலகில் மனித இனம் தோன்றும் முன் **பத்துகோடி ஆண்டுகளுக்கு** முன் தோன்றிய இனம் - **பாம்புகள்.**
* பாம்புப் பண்ணை அமைந்துள்ள இடம் - **சென்னைக்கு அருகே கிண்டி.**
* பெரும்பாலான பாம்புகள் **முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பன**. சில பாம்புகள் **குட்டிப்போடும்.**
* உலகிலேயே மிக நீளமான நஞ்சுள்ள பாம்பு - **ராஜநாகம்(இந்தியா**). இதன் **நீளம்** 15 **அடி. கூடுகட்டி வாழும் ஒரே வகைப்பாம்பு.** இவை மற்ற பாம்புகளை கூட உணவாக்கிக் கொள்ளும்.
* பாம்புகளின் பற்கள் உள்நோக்கி வளைந்திருக்கும் - **இரையை விழுங்கும், மென்று தின்பதில்லை.**
* பாம்பு தான் பிடிக்கும் இறையை கொல்லவும், செரிமானத்திற்காகவும் தன்னுடைய **எச்சில் நஞ்சு** வைத்திருக்கிறது.
* பாம்பிற்கு காது கேட்காது. **தரையில் ஏற்படும் அதிர்வுகளை** உணர்ந்து செய்லபடும்.
* 52 வகையான பாம்புகளுக்கு **நச்சுத்தன்மை** உண்டு.
* பாம்பைக் கொண்றால் அதன் உடல் **பிளந்து வெளிவரும் வாசனை** மற்ற பாம்புகளை அந்த இடத்திற்கு வரவைக்கிறது.
* **சுற்றுப்புறத்தின் வாசனையை** அறிந்து கொள்ள பாம்புகள் அடிக்கடி நாக்கை வெளியே நீட்டும்.
* நல்ல பாம்பின் நஞ்சு **கோப்ராக்சின்(Cobrozin)** என்ற வலி நீக்கி மருந்து தயாரிக்க பயன்படுகிறது.
* பாம்பின் தோலுக்காகப் பாம்புகள் கொல்லப்படுவதைத் தடுக்க கொண்டு வரப்பட்ட சட்டம் - இந்திய அரசின் **வன விலங்கு பாதுகாப்புச் சட்டம்** - 1972.
* மஞ்சள் சிட்டு எந்த பகுதியில் வாழும் - **சமவெளி பகுதியில்.**

**GURU ACADEMY TNPSC / TRB / TET /SSC /**

* தமிழ்நாட்டில் உள்ள பறவைகள் சரணாலயங்களின் எண்ணிக்கை - 13

* சாதி இரண்டொழிய வேறில்லை என்றவர் - **ஔவையார்.**

* தமிழில் உள்ள **முதல்** எழுத்துக்கள் - 30

* தமிழில் உள்ள **உயிர்** எழுத்துக்கள் - 12

* தமிழில் உள்ள **மெய்** எழுத்துக்கள் - 18

* உயிர் எழுத்துக்களும், மெய் எழுத்துக்களும் சேர்ந்து எத்தனை **உயிர்மெய்** எழுத்துக்களை உருவாக்குகின்றன - 216

# இலக்கணம்:

* உடனிலை **மெய் மயக்கம்**:

தன் எழுத்துடன் மட்டும் சேர்ந்து வரும் - **க், ச், த், ப்.**

(எ.கா) பக்கம், அச்சம், மொத்தம், அப்பம்.

* **வேற்றுநிலை மெய்மயக்கம்:**

தன் எழுத்துடன் சேராது பிற எழுத்துக்களுடன் சேர்ந்து வரும் - **ர், ழ்**

எ.கா: சார்பு, வாழ்க்கை

* எழுத்து பிற எழுத்து இரண்டுடன் சேர்ந்து வரும் எழுத்துக்கள் - **ற், ன்.**

எ.கா: குற்றம், மேற்கு -ற், அன்னம், அன்பு - ன்.

* உலகம் வெப்பமடையக் காரணம் - **வாகனப்புகை.**

* ஆறுகள் மாசடையக் காரணம் - **தொழிற்சாலைக்கழிவு.**

* மழை குறையக் காரணம் - **காடுகள் அழிப்பு.**

* மனிதர்கள் யானையை வேட்டையாடக் காரணம் - **தந்தம்**

* **வண்மை** - கொடைத்தன்மை, **வன்மை** - கொடுமை.

# நாலடியார்

* நாலடியாரை பாடியவர்கள் - **சமண முனிவர்கள்**.

* நாலடியார் 400 **பாடல்களைக்** கொண்டது. அறக்கருத்துக்களை கூறுவது.
* நாலடியார் **பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில்** ஒன்று.

* நாலடி **நானூறு என்னும் சிறப்புப் பெயர்** பெற்ற நூல் - **நாலடியார்.**

* பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் பெரும்பாலானவை - **அறநூல்கள்.**



GURU ACADEMY

* பதினெண்கீழ்க்கணக்கு எத்தனை நூல்களை உள்ளடக்கியது - 18

* பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் சேர்ந்து **மேல்கணக்கு நூல்கள்** என அழைக்கப்படுகிறது.

* சங்க இலக்கியகளுக்கு பின் தோன்றிய நூல்களின் தொகுப்பிற்கு **பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்** என பெயர்.

* பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் - **சங்க நூல்கள்** என அழைக்கப்படுகின்றன.

பொருள்: **அணியர்** - நெருங்கி இருப்பவர், **சேய்** - தொலைவு, **செய்** - வயல், **பதினெண்** - பதினெட்டு.

# பாரதியார்

* பாரதியார் வாழ்ந்த காலம்: 11.12.1882 - 11.09.1921(**அகவை** 38)

* பாரதியார் பிறந்த ஊர்: **திருநெல்வேலி மாவட்டம், எட்டையபுரம்.**
* பாரதியாரின் பெற்றோர்: **சின்னச்சாமி அய்யர் - லெட்சுமி அம்மாள்**

* பாரதியாரின் இயர் பெயர்: **சுப்ரமணிய பாரதியார்.**

* பாரதியார் 1897ஆம் ஆண்டு **செல்லம்மாளை** மணந்தார்.

* பாரதியாரின் சிறப்பு பெயர்கள்: **மகாகவி, தேசியகவி, பாட்டுக்கொரு புலவன்.**

* பாரதிக்கு மகாகவி என பட்டம் கொடுத்தவர் - **வ.ரா(ராமசாமி அய்யங்கார்)**

* பாரதி தன்னை **ஷெல்லிதாசன்** என அழைத்துக்கொண்டார்.
* **பாரதி** என்பதன் பொருள் - **கலைமகள்**.

* பாரதியின் முதல் பாடல் "**தனிமை இரக்கம்**" வெளியிட்ட பத்திரிக்கை - மதுரையிலிருந்து வெளிவந்த "**விவேக பானு**" என்ற பத்திரிக்கை.

* பாரதியார் ஆசிரியராகப் பணியாற்றிய பள்ளி - **மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளி**(1904)

* பாரதியார் எந்த பத்திரிக்கையின் மூலம் தனது அரசியல் கருத்துக்களை மக்களிடம் பரப்பினார் - **இந்தியா** என்ற வாரப் பத்திரிக்கை(1906**ல் சென்னையில் பாரதியாரே** தொடங்கி நடத்தினார்)

* பாரதியார் **சுதேசமித்திரன்** பத்திரிக்கையில் **உதவி ஆசிரியராகவும், சக்கரவர்த்தினி** பத்திரிக்கையில் **ஆசிரியராகவும்** பணி செய்தார்.

* பாரதியாரின் குறிப்பிடத்தக்க படைப்புகள்: **பாஞ்சாலி சபதம், பாப்பா பாட்டு, கண்ணன் பாட்டு** முதலியன.

* பாரதியாரின் நினைவுகளை போற்றும் வகையில் **எட்டையபுரத்தில்** அவர் வாழ்ந்த இல்லம், **சென்னை திருவல்லிக்கேணி** அவர் வாழ்ந்த இல்லம் **நினைவு இல்லமாக தமிழக அரசால் பராமரிக்கப்பட்டு** வருகிறது.

* பாரதியாருக்கு **எட்டையபுரத்தில் மணிமண்டபம்** அமைக்கப்பட்டுள்ளது. இதன் மைய மண்டபத்தில் **பாரதியின் ஏழு அடி** உயர திருவுருவச்சிலை அமைக்கப்பட்டு **பஞ்சாப் முதல்வர் தர்பாராசிங் அவர்களால்** 11.12.1999 **அன்று திறந்து** வைக்கப்பட்டது.

பாரதியாரின் பாடல் வரிகள்:

GURU ACADEMY

**"வெள்ளிப்பனிமலையின்மீது உலாவுவோம்"**

**"ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்"**

**"சாதி இரண்டொழிய வேறில்லை"**

**"உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம்"**

பொருள்: **வண்மை** - கொடை, **கோணி** - சாக்கு, **ஞாலம்** - உலகம், **தமிழ்மகள்** - ஔவையார், **உழபடை** - வேளாண்மை செய்யும் பயன்படும் கருவிகள், **பறப்பு** - பறக்கும் விமானம் போன்றவை.

# பறவைகள்

* பருவ காலத்தை மனிதர்களுக்கு உணர்த்துபவை - **பறவைகள்**

* உலகம் முழுவதும் மரம், செடி, கொடிகளை பரப்புவது - **பறவைகள்.**

* நம் நாட்டில் சுமார் 2400 வகைப்பறவைகள் உள்ளன.

* சமவெளி மரங்களில் வாழும் பறவைகள் - **மஞ்சள் சிட்டு, செங்காகம், சுடலைக்குயில், பனங்காடை, தூக்குணாங்குருவி.**

* நீர் நிலைகளில் வாழும் பறவைகள் - **கொக்கு, தாழைக்கோழி, பவளக்காலி, ஆற்று உள்ளான், முக்குளிப்பான், நாரை, அரிவாள் மூக்கன், கரண்டி வாயன், ஊசிவால் வாத்து.**

* மலைகளில் வாழும் பறவைகள் - **கிருவாச்சி, செந்தைப் பூங்குருவி, மின்சிட்டு, கருஞ்சின்னான், நீலகிரி நெட்டைக்காலி, பொன் முதுகு, மரங்கொத்தி, சின்னங்குறுவான், கொண்டை உழவாரன், இராசாளிப்பருந்து, பூமன் ஆந்தை.**

* பறவைகள் பருவ நிலை மாற்றத்தால் இடம் பெயருவதை - **வலசை போதல்** என அழைப்பர்.

* வெயிலும், மழையும், பனியும் மாறி மாறி வருவதை - **பருவநிலை மாற்றம்** என அழைப்பர்.

* அதிக பனிப்பொழியும் மாதம் - **மார்கழி மாதம்.**

* அதிகம் வெயில் அடிக்கும் காலத்தை - **கோடைக்காலம்** என அழைப்பர்.

* நிலத்திலும், அதிக உப்புத் தன்மையுள்ள நீரிலும்; கடும் வெப்பத்தை எதிர் கொள்ளும் தன்மையுடைய பறவை - **பூ தாமரை**.

* தமிழ்நாட்டில் உள்ள பறவைகள் சரணாலயங்கள்: **வேடந்தாங்கல்,** கரிக்கிளி(**காஞ்சிபுரம் மாவட்டம்),**
கஞ்சிரால்குளம், சித்திரஸ்குடி, மேலக் செல்வனூர் (**இராமநாதபுரம் மாவட்டம்**),
பழவேற்காடு (**திருவள்ளுவர் மாவட்டம்**), உதயமார்த்தாண்டபுரம்(**திருவாரூர் மாவட்டம்**),
வடுவூர் (**தஞ்சை மாவட்டம்**)
கரைவெட்டி(**பெரம்பலூர் மாவட்டம்),**
வேட்டங்குடி(**சிவகங்கை மாவட்டம்**),
வெள்ளோடு (**ஈரோடு மாவட்டம்),**

**GURU ACADEMY TNPSC / TRB / TET /SSC /**

கூந்தன்குளம் (**திருவெல்வேலி மாவட்டம்**),

GURU ACADEMY

கோடியக்கரை (**நாகப்பட்டினம் மாவட்டம்**).

* தமிழ்நாட்டில் பட்டாசு வெடிக்காத ஊர் **திருநெல்வேலி** மாவட்டத்தில் உள்ள **கூந்தன் குளம்.**

# பெரியார், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்

<u>பெரியார்:</u>

* இயற்பெயர்: **இராமசாமி**.

* பெற்றோர்: **வேங்கடப்பர், சின்னத்தாயம்மாள்**. * பிறந்த ஊர்: **ஈரோடு**.

* தோற்றுவித்தவை: **பகுத்தறிவாளர் சங்கம், சுயமரியாதை இயக்கம்** அகியன.

* போராட்டம்: **கேரளாவில் வைக்கம் என்ற ஊரில்** தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஆதரவாக போராடி வெற்றிபெற்றதால் **வைக்கம் வீரர்** என அழைக்கப்பட்டார்.

* தன்னைத் தானே மதிப்பதும், தன் மரியாதையை தக்க வைத்துக் கொள்வதும் - **சுயமரியாதை.**

* பெரியாரின் காலம்: **17.09.1879 முதல் 24.12.1973**

* சமூக சீர்திருத்தத்திற்காக ஐக்கிய நாடுகளின் சபையின் **யுனெஸ்கோ விருது 1970 ஆம் ஆண்டு** பெரியாருக்கு வழங்கப்பட்டது.

* **மத்திய அரசு** 1978 ஆம் ஆண்டு பெரியாருக்கு **அஞ்சல்தலை** வெளியிட்டது.

* பெரியார் - **பெண் விடுதலை** மற்றும் **தீண்டாமை** ஒழிப்பிற்காக பாடுபட்டவர்.

* பெரியார் மக்களுக்காக சமூகத் தொண்டாற்ற பெரியார் தம் வாழ்நாளில் எத்தனை நாட்களை செலவு செய்தார் - **8600 நாட்கள்.**
* பெரியார் மக்களுக்காக சமூகத் தொண்டாற்ற எவ்வளவு தூரம் பயணம் செய்தா - **13,12,000 கி.மீ**

* பெரியார் தம் வாழ்நாளில் எத்தனை கூட்டங்களில் எவ்வளவு மணி நேரம் உரையாற்றினார் - **10,700 கூட்டங்கள், 21,400 மணி நேரம்.**

# புறநானூறு

* புறநானூறு = **புறம்** + **நான்கு** + **நூறு**.

* தமிழர்களின் **வரலாறு, பண்பாடு** ஆகியவற்றை அறிய உதவும் நூல்.

* இந்நூல் **புலவர் பலர்** இயற்றிய பாடல்களின் தொகுப்பு.

* அதியமானின் நண்பர் - **ஔவையார்.**

* சங்கப்புலவர்களில் ஒருவர் - **ஔவையார்.**
* நெல்லிக்கனியை அதியமானிடம் பெற்றவர் - **ஔவையார்.**

**GURU ACADEMY TNPSC / TRB / TET /SSC /**

***சங்ககால பெண் கவிஞர்களில்** அதிகப்பாடல் பாடியவர் - இவரும் **ஆத்திச்சூடி பாடிய ஔவையாரும்** வேறுவேறானவர்.

GURU ACADEMY

* ஔவை என்பதன் பொருள் - **தாய்.**

**பாடல் வரிகள்:**

**எவ்வழி நல்லவர் ஆடவர்**

**அவ்வழி நல்லை; வாழிய நிலனே - ஔவையார்**

* பொருள்: **அவல்** - பள்ளம், **மிசை** - மேடு, **நல்லை** - நன்றாக இருப்பாய்.

* திண்ணையை இடித்து தெருவாக்கு என்ற பாடலை இயற்றியவர் - **கவிஞர் தாராபாரதி.**

*கவிஞர் தாராபாரதி **எழுச்சிமிக்க கவிதைகளை** எழுதுவதில் வல்லவர்.

*கவிஞர் தாராபாரதி ஆசிரியராக பணியாற்றியவர், **தமிழக அரசின் நல்லாசிரியர் விருதுபெற்றவர்.**

* காலம்: 26.02.1947 - 13.05.2000

* பிற நூல்கள்: **புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு, தாராபாரதி கவிதைகள்.**

* பாடல்வரிகள் சில: "**கடலின் நான் ஒரு முத்து**"

எத்தனை உயரம் இமயமலை- அதில்

இன்னொரு சிகரம் உனதுதலை"

பூமிப்பந்து என்ன விலை? –உன் , புகழைத் தந்து வாங்கும் விலை!

# பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்

* பிறப்பு: **இராமநாதபுரம் மாவட்டத்தில் பசும்பொன்** எனும் ஊரில் 1908ஆம் ஆண்டு **அக்டோபர் மாதம் 30ம் நாள்** பிறந்தார்.

* பெற்றோர்: தந்தை- **உக்கிரபாண்டித்தேவர்**. தாய் - **இந்திராணி**.
* இஸ்லாமிய பெண்மணி இவருக்கு பாலூட்டி வளர்த்தார்.

* பசும்பொன் முத்துராமலிங்கத்தேவருடைய ஆசிரியர் - **குறைவறவாசித்தான் பிள்ளை.**

* தொடக்கக்கல்வி - **கமுதியில் கிருஸ்தவ பாதிரியார்களிடம்** - பசுமலை உயர்நிலைப்பள்ளி(மதுரை) - **10ம் வகுப்பு ராமநாதபுரம் அரசு** உயர்நிலைப்பள்ளியில். இராமநாதபுரத்தில் பரவிய **பிளேக் நோயால்** இவரது கல்வி நின்றது.

* **தமிழ், ஆங்கிலம் இருமொழிகளிலும் வல்லவர். சிலம்பம், குதிரை ஏற்றம், துப்பாக்கி சுடுதல், ஜோதிடம், மருத்துவம்** ஆகியவர்றை கற்றறிந்தார்.
* முத்துராமலிங்கத்தேவர் எத்தனை சிற்றூர்களில் இருந்த தம் சொந்த நிலங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கினார் - 32 **சிற்றூர்களில் இருந்த நிலங்கள்.**



GURU ACADEMY

* முத்துராமலிங்கத்தேவர் தன்னுடைய அரசியல் குருவாக கருதியவர் - **வங்கத்து சிங்கம் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்**. இவரின் விருப்பத்திற்கேற்ப **நேதாஜி 06.09.1939-ல் மதுரை** வந்தார்.

* **நிலக்கிழார் ஒழிப்பிலும் ஆலய நுழைவுப் போராட்டத்திலும்** முன்னின்றார்.

* **சமபந்தி** முறையை ஆதரித்தார்.

* **தேசியம் காத்த செம்மல்** என இவரை **திரு.வி.க** பாராட்டியுள்ளார்.

* தேர்தலில் போட்டியிட்டு **ஐந்துமுறை வெற்றி** பெற்றார்.**(1937,1946,1952,1957,1962)**

* **தெய்வீகம், தேசியம்** இரண்டையும் இருகண்களாக போற்றியவர்.

* சிறப்பு பெயர்கள்: **வேதாந்த பாஸ்கர், பிரணவகேசரி, சன்மார்க்க கண்ட மாருதம், இந்து புத்த சம்ய மேதை**.

* **1995ல் மத்திய அரசு** இவருக்கு **அஞ்சல்தலை** வெளியிட்டது.

* தமிழக அரசு சென்னையில் இவருக்கு சிலையும், அச்சிலை இருக்கும் சாலைக்கு **பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்** பெயரையே சூட்டியுள்ளது.

* முத்துராமலிங்க தேவர் தன்னுடைய சொத்துக்களை 17 **பாகங்களாக பிரித்தார்.**

* **17 பாக சொத்துக்களில் 16 பாகங்களை 16 பேர்களுக்கு இனாம் சாசனமாக** எழுதி வைத்தார்.

* **உப்பக்கம்** என்றால் **முதுகப்பக்கம்** என்று பொருள்.

* **உம்பர்** என்றால் **மேலே** என்று பொருள்.

* **உதுக்கண்** - சற்றுத் தொலைவில் பார்.

* கன்னியாகுமாரியில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்ட ஆண்டு - **2001 சனவரி-1.**

** இவரின் கூற்றுகள்:

* சாதியையும் நிறத்தையும் பார்த்து மனிதனை தாழ்வுபடுத்துவது பெருங்கொடுமை ஆண்டவன் மனித குலத்தைத்தான் படைத்தானே தவிர சாதியையும் நிறத்தையும் அல்ல சாதியும் நிறமும் அரசியலுக்கும் இல்லை, ஆன்மீகத்ததிற்கும் இல்லை.

* வீரமில்லாத வாழ்வும் விவேகமில்லாத வீரமும் **வீணாகும். பனை மரத்திலிருந்து விழுந்து பிழைத்தவனும் உண்டு. வயல் வரப்பில் வழுக்கி விழுந்து இறந்தவனும் உண்டு.**

* மனிதனின் மனநிலையை **இருள், மருள், தெருள், அருள்** என குறிப்பிட்டுள்ளார்.

* மறைவு - **1936ஆம் ஆண்டு அக்டோபர் 30(பிறந்தநாள்)**

# இலக்கணம்

** சுட்டெழுத்துக்கள்- மனிதனையோ பொருளையோ சுட்டிகாட்ட உதவும் எழுத்துக்கள் **சுட்டெழுத்துக்கள்**. அவை: **அ, இ** பழங்காலத்தில் **உ** (தற்போது பயன்படுத்துவது இல்லை)



GURU ACADEMY

எ.கா: **அப்பெண், இப்பையன், இவ்வீடு, அந்தப்பக்கம், இந்தவீடு, அ, இ** சுட்டெழுத்துக்கள் தனியே நின்று சுட்டும் போது ஆண் பெண் அனைவரையும் பொதுவாக சுட்டுகின்றன.

* **அகச்சுட்டு** - அவன், இவன்

* **புறச்சுட்டு** - அப்பையன்

* **சுட்டுத்திரிபு** - அந்தப்பக்கம்.

* தகவலை வினா ஆக்கும் எழுத்து - **ஆ**

எ.கா: அவன் செய்தான் - **அவனா செய்தான்**?

* வினா எழுப்ப உதவும் வேறு சில எழுத்துக்கள் - **எ-விடை என்ன? ஏ-ஏன் வந்தாய்? யா-யார் அங்கே ? யோ- நீயோ செய்தாய்?**

* சொல்லுக்கு அழுத்தம் தரும் உயிரெழுத்து - **ஏ**

எ.கா: **அவனோ** செயதான், **சீதையே** சிறந்தவள்.

* தற்போது **ஏ** க்கு பதில் தான் பயன்படுத்தும் வழக்கம் உள்ளது. அவன் **தான் சிறந்தவன்**.

**பொருள்:**

* **ஈரம்**- அன்பு, **அனைஇ**-கலந்து, **படிறு**-வஞ்சம், **அகன்**-உள்ளம், **அமர்**-விருப்பம், **செம்பொருள்**-சிறந்த பொருள், **துவ்வாமை**-வறுமை, **அல்லவை**-பாவம், **நன்றி**-நன்மை, **சிறுமை**-துன்பம், **ஈன்றல்**-தருதல், **வனகொல்**-கடுஞ்சொல், **கவர்தல்**-நுகர்தல்.

# பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

* **செய்யும் தொழிலே தெய்வம்** என்ற பாடலை எழுதியவர் - **பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.**

* பிறந்த ஊர் - **பட்டுக்கோட்டை அருகே செங்கப்படுத்தான்காடு**.

* காலம்: **13.04.1930 - 08.10.1959**

* **மக்கள் கவிஞர்** என அழைக்கப்பட்டவர் - **பட்டுகோட்டை கல்யாணசுந்தரம்.**

* தனது பாடல்களில் பொதுவுடைமைச் சிந்தனைகளை கூறியுள்ளார்.

** சில பாடல் வரிகள்:

**செய்யும் தொழிலே தெய்வம் - அந்தத்**

**திறமைதான் நமது செல்வம்**

**"பயிரை வளர்த்தால் பலனாகும் - அது**

**உயிரைக் காக்கும் உணவாகும்"**

**"காயும் ஒரு நாள் கனியாகும் -நம்**

கனவும் ஒரு நாள் நனவாகும்" **GURU ACADEMY TNPSC / TRB / TET /SSC /**

# இசையமுது, பழமொழி நானூறு

* எழுதியவர் - **பாரதிதாசன்**

* இயற்பெயர் - **கனக சுப்புரத்தினம்**
* சிறப்பு பெயர் - **புரட்சிக்கவிஞர், பாவேந்தர்.**

* காலம்: **29.04.1891 - 21.04.1964(அகவை 72)**

பெற்றோர்: **கனகசபை முதலியார் - இலக்குமி அம்மாள்**
திருமணம்: 1920**ல் பழநி அம்மையாரை மணந்தார்.**

* படைப்புகள்: **பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இருண்ட வீடு, குடும்ப விளக்கு.**

* கல்லாத பெண்களின் இழிவைக் கூறும் நூல் - **இருண்ட வீடு.**

* கற்ற பெண்களின் சிறப்பைக் கூறும் நூல் - **குடும்ப விளக்கு.**

* இயற்கையை வர்ணிக்கும் நூல் - **அழகின் சிரிப்பு.**

* பாரதிதாசன் நடத்திய இதழ் - **குயில்.**

* யார் மீது கொண்ட காதலால் தன் பெயரை பாரதிதாசன் என்று மாற்றிக் கொண்டார் - **பாரதியார் மீது கொண்ட காதலால்**

** பொருள்: **பொடி** - மகரந்தப்பொடி, **வானப்புனல்** - வானத்து நீர்(மழை நீர்), **தழையா வெப்பம்** - பெருகும் வெப்பம், **குறையாத வெப்பம்**, தழைக்கவும் - குறையவும்.

## பழமொழி நானூறு

* ஆசிரியர் - **முன்றுறை அரையனார், முன்றுறை - ஊர்ப்பெயர், அரையன் - அரசனைக் குறிக்கும் சொல்.**

* பழமொழியில் உள்ள பாடல்கள் – **400**

**ஆற்றுணா வேண்டுவது இல்** -"கற்றவனுக்கு கட்டுச்சோறு வேண்டாம்"

**ஆற்றுணா** - வழிநடை உணவு(கட்டுச்சோறு)

குறிப்பு: **ஆறு** - ஒர் எண்(6), ஆறு - **நதி**, ஆறு - **வழி**.

## ஜவர்கர்லால் நேரு

* நாட்டின் விடுதலைக்குப் பின் இந்தியாவின் முதல் பிரதமர் - **ஜவர்கர்லால் நேரு**

* நேருவின் துணைவியார் பெயர் - **கமலா**

* தாகூர் ஆரம்பித்த **விஸ்வபாரதி கல்லூரி** மேற்குவங்கத்தில் சாந்தி நிகேதன் என்னுமிடத்தில் உள்ளது.



GURU ACADEMY

* நேரு தன் மகள் இந்திரா காந்திக்கும் 42 **ஆண்டுகள்**(1922-1964) **கடிதம்** எழுதியுள்ளார்.

* பாடப்பகுதியில் உள்ள கடிதம் **அல்மோரா மாவட்டச் சிறையில்** இருக்கும் போது 1935 **பிப்ரவரி** 22 அன்று எழுதப்பட்டது.

* நேருவின் கடிதம் இங்கிலாந்தில் உள்ள **கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில்** உள்ளது. நேரு விரும்பி படித்தது - **ஆங்கில நூல்கள்.**

* போரும் அமைதியும் யாருடைய நாவல் - **டால் ஸ்டாய்**

* அல்மோரா சிறை உள்ள இடம் - **உத்திராஞ்சல்.**

* கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் உள்ள இடம் - **இங்கிலாந்து**.

* இந்திரா காந்தி படித்த பல்கலைக்கழகம் - **விஸ்வபாரதி.**

* **தழை** என்பதன் பொருள் - **செடிகொடி.**

* **சேக்ஸ்பியர்** - ஆங்கில நாடக ஆசிரியர்.

* **மில்டன்** - ஆங்கில கவிஞர்.

* **பிளேட்டோ** - கிரேக்கச் சிந்தனையாளர்.

* **காளிதாசர்** - வடமொழி நாடக ஆசிரியர் (**சகுந்தலம் நாடகம்**).
* **டால்ஸ்டாய்** - **இரஸ்ய நாட்டு எழுத்தாளர்**(போரும் அமைதியும் நாவல் - உலகில் மிகச்சிறந்த நாவல்களில் ஒன்று என இதனை நேரு குறிப்பிடுகிறார்.

* **பெர்னாட்ஷா** - ஆங்கில நாடக ஆசிரியர்.
* **பேட்ரண்ட் ரஸ்ஸல்** - சிந்தனையாளர், கல்வியாளர்(**நேருவுக்கு மிகவும் பிடித்த** கல்விச் சிந்தனையாளர்).

* **கிருபாளினி - விசுவபாரதியில் பணிபுரிந்த பேராசிரியர்.**

* நேரு மகளுக்கு எழுதிய கடிதத்தில்  அதிகம் கூறியது - **நூல்கள் பற்றி.**

** குறிப்பு: **உலகம்** - ஞாலம், **புவி** - பூமி. **முகில்** - எழில், **கொண்டல்** - மேகம், **மன்னன்** - வேந்தன், கொற்றவன் -அரசன்.

# இலக்கணம்

* ஒலியை உணர்த்தும் சொற்கள் இரண்டு இரண்டாக சேர்த்து வருவது, **பிரித்தால் பொருள் தராது.**

எ.கா: **கண கண, சல சல, தணதண,** பட பட, குடுகுடு, **வளவள, பளபள.**

* **சித்தர்கள் - நானூறு ஆண்டுகளுக்கு** முன் தமிழகத்தின் காடு மலைகளில் வாழ்ந்தவர்கள், இவர்கள் உருவ வழிபாடு செய்யாமல் **வெட்ட வெளியையே கடவுளாக** வழிப்பட்டவர்கள்.

* "**வைதோரைக் கூட வையாதே**" என்ற சித்தர் பாடலை பாடியவர் - **கடுவெளிச் சித்தர்.**

* உருவ வழிபாடு செய்யாமல் இயற்கையை கடவுளாக வழிபட்டவர் -**கடுவெளிச் சித்தர்.**

** பொருள்: * **சித்து** – அறிவு * கடுவெளிச் சித்தர் பாடிய பாடல்கள் - 54.

* நந்தவனத்தில் ஓர் ஆண்டின் அவன் நாடாறு மாதமாய் என்ப் பாடியவர் - **கடுவெளிச் சித்தர்.**

* **பாம்பாட்டிச் சித்தர், குதம்பைச் சித்தர், அழுகினிச் சித்தர்** - இவை **காரணப்பெயர்கள்.**

**** பொருள்**** * **வேம்பு** - கசப்பான சொற்கள்.

* **வீறாப்பு** - இருமாப்பு, **கடம்** - உடம்பு. **சாற்றும்** - புகழ்ச்சியாக்ப் பேசுவவது.

* கவிஞர் அப்துல் ரகுமானின் "**ஆலா பனை**" என்னும் **நூல் சாகித்ய அகாடமி விருது** பெற்றது.

* இவரின் பிற படைப்புகள்- **சுட்டுவிரல், பால்வீதி, நேயர் விருப்பம், பித்தன்.**

* புதுக்கவிதை புனைவதில் புகழ் பெற்ற கவிஞர் - **கவிக்கோ அப்துல்ரகுமான்.**

* **தாகம் என்ற கவிதை** எந்த கவிதை தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது -**பால் வீதி**

# நான்மணிக்கடிகை, நாட்டுப்புறப்பாட்டு

**நான்மணிக்கடிகை:**
* ஆசிரியர்: **விளம்பிநாகனார்,** விளம்பி என்பது ஊர் பெயர். நாகனார் - இயற்பெயர்.
* கடிகை என்றால் - **அணிகலன் என்று பொருள்.**

* நான்மணிக்கடிகையில் உள்ள ஒவ்வொரு பாட்டும் **நான்கு அறக்கருத்துக்களைக்** கூறுகின்றன.

* **நான்கு மணிகள் கொண்ட அணிகலன்** என்பது எதன் பொருள் - **நான்மணிக்கடிகை.**

* **குடும்பத்தின் விளக்கு - பெண் என்றும்**, பெண்ணுக்கு விளக்கு பண்பில் சிறந்த பிள்ளைகள் மனத்திற்கினிய அன்புமிக்க பிள்ளைகளுக்கு விளக்கினைப் போன்றது கல்வி, என்ற கருத்து இப்பாடலில் வருகிறது.

** பொருள்: **மடவாள்** - பெண், **தகைசால்** - பண்பில் சிறந்த, **உணர்வு** - நல்லெண்ணம், **காதல்புதல்வர்** - அன்பு மக்கள்.

**நாட்டுப்புறப்பாட்டு**

* எழுத்து வழியாக வராமல் **வாய் வழியாக** பரவுகின்ற பாட்டு அல்லது **தாளில் எழுதாத** பாடல் - **நாட்டுப்புறப்பாடல்** எனப்படுகிறது.

* எழுதப்படாத எல்லோருக்கும் தெரிந்த கதைகள் - **வாய்மொழி இலக்கியம்** என்ப்படுகிறது.

* சென்னை போன்ற பெருநகரங்களில் பாடப்படும் நாட்டுப்புறப் பாடல் - **கானா பாடல்**.

* பிறந்த குழந்தைகளுக்கு பாடுவது - **தாலாட்டுப் பாடல்.**

* கொஞ்சம் வளர்ந்த குழந்தைகளுக்கு பாடுவது - **விளையாட்டுப் பாடல்.**

GURU ACADEMY

* வேலை செய்வோர் களைப்பு நீங்க பாடுவது - **தொழிற் பாடல்.**
* திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில் பாடப்பாடுவது - **சடங்கு பாடல், கொண்டாட்டப் பாடல்.**

* சாமி கும்பிடுவோர் பாடுவது - **வழிப்பாட்டுப் பாடல்.**

* இறந்தோர்க்கு பாடுவது - **ஒப்பாரிபாடல்.**

* பொருள்: **ஆனம்** - குழம்ப, **அகவிலை** - தானியவிலை, **நாழி** - தானியங்களை அளக்கும் படி.

* அறிவை வளர்க்கும் அற்புதக் கதைகள் என்ற நூலின் ஆசிரியர் - **ஜானகி மணாளன்.**

* சுவாமி விவேகானந்தரின் இயற்பெயர் - **நரேந்திரதத்.**

* **பழமொழியை சொல்வடை** என்றும் மக்கள் கூறுவர்.

* தமிழ் சொற்கள் நான்கு வகைப்படும். அவை –
**பெயர்ச் சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்.**

* சுவாமி விவேகானந்தரின் இயற்பெயர் - **நரேந்திர நாத்**

* அறிவை வளர்க்கும் அற்புதக்கதைகள் என்ற நூலை எழுதியவர் - **ஜானகி மணாளன்.**
* **கூடாரம்** என்பதன் பொருள் – **தாங்குதல்.**

G.RAMKUMAR M.A.M.A.B.Ed.D.T.Ed.PGDCA.,

CELL : 99444 77587,99422 63961.

**GURU ACADEMY TNPSC / TRB / TET /SSC /**

**GURU TUITION CENTRE,**

**GURU TUTORIAL COLLAGE,**

**GURU COMPUTER EDUCATION,**

**T.N.PALAYAM-638 506.**

GURU ACADEMY